**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW9 (PW6) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 02.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.அருண் | Father Name | : | திரு.முருகேஷ் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1-A3 present.**

**முதல் விசாரணை:**

நான் பொம்மண்டபள்ளி கிராமத்தில் வசிக்கிறேன். தற்போது டிரைவராக பணிபுரிக்கிறனே். அந்த சமயத்தில் கிளினராக இருந்தேன். சுமார் 7-8 வருடம் முன்பாக நான் Bathroom போவதற்காக காலை 5.45 மணிக்கு ஓசூர் நோக்கி போகும் இரயில்வே டிராக் அருகே நான் போனபோது அங்கு கூட்டமாக இருந்தது. அப்போது என்னுடைய ஓனர் எனக்கு போன் அடித்தார் , நான் அதன்பிறகு கிளம்பிவிட்டேன். ஆர்த்தி எனக்கு உறவுகாரர் இல்லை. ஆனால் எங்கள் ஊரை சார்ந்தவர். ஆர்த்தி வீட்டுகாரர் பெயர் முருகேஷ். முருகேஷ் இறந்து 7-8 வருடங்கள் ஆகிறது. Train Track ல் முருகேஷ் இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆர்த்திக்கு முருகேஷ் இறந்த தகவலை யார் கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது.

சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணைனின்போது கடந்த 12.02.2018 தேதி காலை 6.00 மணிக்கு நான் பாத் ரூம் போக ஒசூர் ஆனைக்கல் போகும் இரயில் பாதை அருகே போனபோது அங்கு கூட்டமாக இருந்தது என்றும், அங்கு முருகேஷ் என்பவர் தலை , கழுந்து, கை-கால் ஆகிய இடங்களில் வெட்டு காயங்களுடன் இறந்து கிடந்தார் என்றும் இது சம்பந்தமாக முருகேஷ் மனைவி ஆர்த்திக்கு நான் போய் காலை 6.30 மணிக்கு தகவல் சொன்னேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மை விவரங்களை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் அது தவறு.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.**

VASUDEVAN DAMODARAN

Additional District Judge
Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**
KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW6 (PW5) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 02.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| Name | : | திரு.அஸ்வதப்பா | Father Name | : | திரு.பில்லப்பா |
|---|---|---|---|---|---|
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1-A3 present.**

**முதல் விசாரணை:**

முருகேஷ் எனக்கு முறையில் அண்ணன் பையன் வேண்டும் . முருகேஷ் மனைவி பெயர் ஆர்த்தி . நான் பொம்மண்டபள்ளி குடியிருக்கிறேன். முருகேஷ் மற்றும் ஆர்த்தியும் நஞ்ஜாபூரம் என்ற இடத்தில் குடியிருந்தார்கள். முருகேஷ் Water Service கடை வைத்திருந்தார். சுமார் 7-8 வருடங்களுக்கு முன்பாக நான் நைட் சிப்ட் போய்விட்டு வீட்டில் தூங்கிக்கொண்டியிருந்தேன். என் மாமா எல்லப்பன் வந்து என்னை எழுப்பினார். என்னை எழுப்பி முருகேஷ் இறந்துவிட்டதாகவும் அதனால் என்னை மத்திகிரி காவல் நிலையத்திற்கு அழைத்துபோனார் . அங்கு சொந்தகாரர்கள் வந்து கையெழுத்து போடவேண்டும் என்று சொன்னார்கள் . அங்கு இருந்து Hosur Government ஹாஸ்பிட்டலுக்கு போய் இருந்தோம். பாடி இருந்த இடத்திற்கு காலை 6.30-7.00 க்குள் போய் இருந்தோம். போலீசார் 2-3 பேர் அங்கு இருந்தார்கள். பாடி கிடந்த இடத்தில் வைத்து கையெழுத்து போடவில்லை, ஸ்டேசனில் வைத்து தான் கையெழுத்து போட்டேன்.

தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் முதல் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையழுத்து என்னுடையது தான் . அந்த கையெழுத்து மட்டும் **Ex.P.6** ஆகும். முதல் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான் . அந்த கையெழுத்து மட்டும் **Ex.P.7** ஆகும். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரண்டாவது பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **Ex.P.8** ஆகும். இரண்டாவது கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **Ex.P.9** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் போலீஸ் விசாரணையின்போது கடந்த 12.02.2018 தேதி காலை 10.00 மணிக்கு ஆனைக்கல் போகும் இரயில் பாதை அருகே உடல் கிடந்த இடத்தில் போலீசார் காலை 10.00-11.00 வரை தயாரித்த பார்வை மகஜரில் சாட்சி கையெழுத்து போட்டதாகவும். 11.00-11.30 வரையில் தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையெழுத்து போட்டதாகவும் அதன்பிறகு கொலை நடந்த இடத்திற்கு போலீசார் என்னை அழைத்துசென்று பகல் 12.00-1.00 வரை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டதாகவும் , பகல் 1.00-1.30 வரையில் இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண் ஆகியவற்றை தனித்தனியாக

கைப்பற்றும்போது நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி காவல் நிலையத்தில் வைத்து அந்த கையெழுத்துக்களை போட்டதாக பொய்யாக சொல்லிகிறேன் என்றால் அது தவறு.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் என் மாமா எல்லப்பன் , மற்றும் நவீன் ஆகியோர் கையெழுத்து போட்டோம். அதில் என்ன எழுதி இருந்தது என்ற விவரத்தை நான் படித்து பார்க்கவில்லை . என் மாமா எல்லப்பன் என்னை அழைத்ததால் நான் ஸ்டேசனுக்கு போனேன் என்றால் சரிதான் . அ.சா.1 ஆர்த்தி என்னுடைய உறவினார் என்பதால் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

VASUDEVAN DAMODARAN

Additional District Judge
Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW5 (PW4) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 02.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.நவீன் | Father Name | : | திரு.வெங்கடப்பா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1- A3 present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது பொம்மண்டபள்ளி கிராமத்தில் வசிக்கிறேன் . டிரைவர் வேலை செய்கிறேன் . ஆர்த்தி என்னுடைய அக்கா ஆவார் . ஆர்த்தியின் வீட்டுக்காரர் பெயர் முருகேஷ் , அவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள் . ஆர்த்தியும் , முருகேஷிம் பொம்மண்டபள்ளி சர்க்கிள் அருகே நாராயணரெட்டி என்பவர் வீட்டில் குடியிருந்து வந்தார்கள் . முருகேஷ் Sai Water Service என்ற கடை வைத்திருந்தார். முருகேஷ் 2018 வருடம் , மாதம் மற்றும் தேதி ஞாபகமில்லை என்னுடைய மாமா முருகேஷ் இறந்துவிட்டதாக ஊரில் பேசிக்கொண்டார்கள் . ஆனைக்கல் போகும் இரயில்வே பாதையில் அவருடைய உடல் இருந்தது . அவர் உடலில் கழுத்து பகுதி, கை, ஆகிய இடங்களில் தேய்ந்து போய் இருந்தது . ஆஜரில் இருக்கும் கோபால் என்பவருக்கும் முருகேசுக்கும் தகராறு இருந்தது , என்ன தகராறு இருந்தது என்ற விவரம் தெரியாது . அதனால் சண்டை வந்து பேசிக்கொண்டார்கள். இரயில்வே தண்டவாளத்தில் வெட்டி

போட்டுவிட்டார்கள் என்று ஊரில் பேசிக்கொண்டார்கள் . நாராயணன் வீட்டின் அருகே போலீசார் வந்திருந்தார்கள் . அதன்பிறகு இரயில்வே தண்டவாளம் அந்த பாடி கிடந்த இடத்திற்கு நான் மற்றும் போலீசார் ஆகியோர் போனோம். அந்த பாடி கிடந்த இடத்தில் போலீசார் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் அங்கு வந்து அந்த இடத்தை செக் செய்தார்கள் . அங்கு இருந்து மண்ணை எடுத்தார்கள் . மண்ணை போலீசார் எடுத்து சென்றுவிட்டார்கள். அங்கு கையெழுத்து போட்டுவிட்டு நாங்கள் ஜி.எச்–க்கு போய்விட்டோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான் . அந்த பார்வை மகஜர் **Ex.P.2** ஆகும். அதேபோல் தற்போது காண்பிக்கப்படும் மற்றொரு பார்வை மகஜரிலுள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் **Ex.P.3** ஆகும். மண்ணை கைப்பற்றியபோது தயாரிப்பட்ட பார்வை மகஜர் **Ex.P.4** ஆகும். தற்போது காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் சாட்சி கையழுத்து என்னுடையது தான், அந்த முதல் சாட்சி கையெழுத்து மட்டும் **Ex.P. 5** ஆகும். போலீசார் அன்றைய தினமே என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி, அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் போலீஸ் விசாரணையின் போது கடந்த 12.02.2018ம் தேதி பகல் 12.00 மணி அளவில் கொலை நடந்ததாக சொல்லப்பப்படும் பொம்மண்டபள்ளி சர்க்கிள் அருகே செந்தில் முருகன் வெல்டிங் ஷாப் அருகில் மேற்கு பகுதியில் காலி நிலத்தை போலீசார் பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் தயார்

செய்தார்கள் என்றும் , அந்த பார்வை மகஜரில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றும் அதே இடத்தில் வைத்து பகல் 1.00 மணிக்கு போலீசார் இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியபோது நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது உடல் கிடந்த இடத்தில் இருந்து நேராக ஜி .எச் மருத்துவமனை போய்விட்டேன் என்று சம்பவ இடத்தை போலீசார் பார்வையிட்டபோது வரவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>

இறந்து போன நபர் என் அக்காவின் கணவர் என்றால் சரிதான் . நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான் . சம்பவத்தை பற்றி ஊரில் பேசுக்கொண்டியிருந்ததை கேள்வி பட்டு தான் நான் அந்த உடல் இருந்து இடத்திற்கு போனேன் . கோபாலுக்கும், முருகேசனுக்கும் எது சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியாது நான் படித்து பார்க்கவில்லை . நான் எத்தனை கையெழுத்துக்கள் போட்டேன் என்பது ஞாபகமில்லை . அசா.1 ஆர்த்தி என் அக்கா என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்துக்கள் போட்டேன் என்றால் சரிதான். அதேபோல் போலீசார் எவ்வளவு மண் எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

VASUDEVAN DAMODARAN

Additional District Judge

Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW4 (PW3) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 02.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.எல்லப்பன் | Father Name | : | திரு.சீனப்பா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused A1 to A3 present.**

**முதல் விசாரணை:**

நான் பொம்மண்டபள்ளி கிராமத்தில் குடியிருக்கிறேன் . முன்பு காண்ட்ராக்ட் வேலை செய்து வந்தேன் தற்போது வேலைக்கு போவதில்லை . முருகேஷ் என் அக்கா பையன். சுமார் 10 வருடம் முன்பு முருகேஷ் ஆர்த்தி என்பவரை திருமணம் செய்து கொண்டு அதன்மூலம் அவருக்கு இரண்டு குழந்தை பிறந்தது. முருகேஷ் Water Wash கடை வைத்திருந்தார். நான் பொம்மண்டபள்ளியில் குடியிருந்தேன் . முருகேஷ் ஊருக்கு வெளியே பொம்மண்டப்பள்ளியின் பஸ் டாப் அருகே ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தார். 2018 வருடம் மாதம் மற்றும் தேதி ஞாபகமில்லை , முருகேஷ்க்கு Accident ஆகிவிட்டது என்று போலீசார் சொன்னார்கள் நான் போலீஸ் ஸ்டேசனுக்கு போய் கையெழுத்து போட்டேன் . இறப்பு நிகழ்ச்சிக்கு நான் ஏதும் போகவில்லை. நான் போய் பாடியை பார்க்கவும் இல்லை. காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் என்னை போலீசார் காவல் நிலையத்திற்கு

அழைத்துப்போனார்கள். என் அக்கா பையன் இறந்தற்காக என்னை போலீஸ் ஸ்டேசன் அழைத்துப்போனார்கள்.

<u>சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

போலீஸ் விசாரணையின் போது கடந்த 12.02.2018 அன்று முருகேஷ் ஒசூர் ஆனைக்கல் போகும் இரயில்வே பாதையில் வெட்டு காயங்களுடன் இறந்துகிடப்பதாக தகவல் தெரிந்து போய் பார்த்தபோது அவருக்கு கழுத்து , தலையின் பின் பகுதி, தோள் பட்டை , வலது கை–கால் ஆகிய இடங்களில் வெட்டு காயங்களுடன் இறந்து கிடந்தார் என்றும் , கோபால் (எ) தேவாவுக்கும் முருகேஷ் –க்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக கடந்த 11.02.2018 தேதி செந்தில் முருகன் வெல்டிங் ஷாப் அருகே உள்ள காலி நிலத்தில் கோபால் அவருடைய கூட்டாளிகளுடன் சேர்ந்துக்கொண்டு கூர்மையான ஆயுதத்தால் முருகேசை வெட்டி கொலை செய்துவிட்டு அதனை மறைக்க முருகேஷின் பிரேதத்தை இரயில்வே பாதையில் போட்டுவிட்டு தலைமறைவாக இருந்தார் என்று போலீஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எந்த விவரமும் எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையின்</u>

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது . என்னை போலீசார் காவல் நிலையத்திற்கு தான் அழைத்துச் சென்றார்கள் என்றால்

சரிதான். போலீசார் அங்கு என்ன எழுதிக்கொண்டார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான் . நான் கையெழுத்து ஏதும் போடவில்லை என்றால் அது தவறு , நான் கையெழுத்து போட்டேன் . நான் எந்த ஆவணத்தில் கையெழுத்து போடேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான் . போலீசார் கையெழுத்து போடுமாறு சொன்னதால் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

VASUDEVAN DAMODARAN

Additional District Judge
Digitally signed by VASUDEVAN DAMODARAN